# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **O.S.No.42/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **வா.சா- 01 (PW- 01 )** |
| **பெயர்** | **:-** | **திருநாவுக்கரசு த/பெ. தியாகராஜன்** |
| **தேதி** | **:-** | **21-07-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**04-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

Geyo Aqua Industries -என்ற நிறுமத்தில் 04-ஆம் பிரதிவாதி கூட்டாளி இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன நிறுமத்தை கலைக்க இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன நிறுமம் தொடங்கப்படுதவற்குமுன் Kings Aquatech என்ற நிறுமம் தண்ணீர் சுத்தம் செய்யும் தொழிற்சாலையாக தொடங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் 04-ஆம் பிரதிவாதியும் கூட்டாளியாக இருந்தார் என்றால் சரிதான். 04-ஆம் பிரதிவாதி அந்த நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு அதன்பிறகு புதிதாக Geyo Aqua Industries என்று பெயர் வைத்து அதேத் தொழிலை தொடங்கினோம் என்றால் சரிதான். இந்த நிறுமதத்தில் கூடுதலாக தொகை முதலீடு செய்து தொழில் செய்தோம் என்றால் சரிதான். Kings Aquatech என்ற நிறுமத்தில் 04-ஆம் பிரதிவாதி 8 இலட்சம் உரூபாய் முதலீடு செய்திருந்தார் என்றால் சரிதான். இன்றுவரை அந்த தொகை அவருக்கு திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நானும் 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளும் அந்த தொகையை 04-ஆம்

பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். 04-ஆம் பிரதிவாதி தனியாக எந்த முடிவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். Geyo நிறுமம் குறித்து 04-ஆம் பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த நிறுமத்திற்காக கடன் வாங்கியதோ முதலீடு செய்ததோ 04-ஆம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். நான் 04-ஆம் பிரதிவாதிக்கு எந்த ஒரு அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நானும் 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளும் 04-ஆம் பிரதிவாதிக்கு 08 இலட்சம் உரூபாய் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.